NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, Front Page
**Date:** 6 July 2019

# $370 மி. செலவில் மேம்பட்ட சிகிச்சை, பயிற்சி வசதிகளுடன் பல்மருத்துவ நிலையம்

கென்ட் ரிட்ஜில் $370 மில்லியன் மதிப்பிலான புதிய பல்மருத்துவ நிலையம் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து, பல் தொடர்பான சிக்கலான நோய்களுக்கு மானியத்துடன்கூடிய சிறப்பு சிகிச்சை வழங்கும் திறன் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கான் கிம் யோங் கூறியுள்ளார்.

'நேஷனல் யுனிவர்சிட்டி சென்டர் ஃபார் ஓரல் ஹெல்த் சிங்கப்பூர்' எனும் இந்த புதிய நிலையத்தில் நாளொன்றுக்கு சுமார் 500 நோயாளிகள் வரை சிகிச்சைபெற முடியும். நான்காண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இந்த அளவு 40% அதிகம்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் பல்மருத்துவத் துறை இந்தப் புதிய கட்டடத்தில் இயங்குவதுடன், 2021ஆம் ஆண்டிலிருந்து பல்மருத்துவத் துறையில் பட்டக் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 60லிருந்து 80ஆக உயரும். என்யுஎச்சின் அங்கமான இந்த நிலையம் 11 மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இந்தப் புதிய நிலையத்தில் பல் அமைவியல், குழந்தைகளுக்கான பல்மருத்துவம், பல்சூழ்ந்த திசுவியல் (ஈறு) ஆகியவற்றுடன் வாய், தாடை மற்றும் முகத்தில் ஏற்படும் காயங்கள், நோய்களுக்கான சிகிச்சை போன்றவை வழங்கப்படும்.



சக்கர நாற்காலியில் இருப்போர், அதிக உடல் பருமனால் சாதாரண இருக்கையைப் பயன்படுத்த முடியாதோர் போன்றோருக்கு ஏற்ற வசதிகள் புதிய நிலையத்தில் உள்ளன.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிறப்புத் தேவையுடையவர்கள், சிக்கலான நிலைகள் மட்டுமின்றி மூப்படைந்த நோயாளிகளுக்கான பலதுறை சிறப்புப் பராமரிப்புச் சேவையையும் இந்த நிலையம் வழங்கும். இதன் அனைத்து அறைகளும் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் விதத்தில் உள்ளன. நிலையத்தை அதிகாரபூர்வமாகத் திறந்துவைத்த சுகாதார அமைச்சர் கான் கிம் யோங், இவ்வாண்டு முதல் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பல்மருத்துவத் துறையில் மூப்படைந்தவர்களுக்கான பல்மருத்துவத்தில் பகுதிநேர இளங்கலைப் பட்டயக் கல்வி தொடங்கப்படும் என்றார். அது ஈராண்டு படிப்பாகும்.

நன்யாங் பலதுறைத் தொழிற் கல்லூரியின் 'ஓரல் ஹெல்த் தெரபி' துறையில் பயிலும் மாணவர்களும் இங்கு பயிற்சி பெறுவர். மேம்பட்ட, புதிய சிகிச்சை முறைகளை மாணவர்கள் இந்த நிலையத்தில் கற்றுக்கொள்வர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.